# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPEMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

## 2007

# தமிழ்மொழி

## ஆண்டு 7

சுட்டெண் :

**நேரம் : 150 நிமிடங்கள்**

**மொத்தப்புள்ளிகள் : 100**

1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பழந்தமிழர் கலைகளை எத்தனை வகையாக வகுத்தனர்?

(அ) 112 (ஆ) 64 (இ) 03 (ஈ) 98

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

2. இசைக்கலை நுணுக்கங்கள் பற்றிக் கூறும் பழந்தமிழ் இலக்கியம்

(அ) தொல்காப்பியம் (ஆ) மணிமேகலை

(இ) சிலப்பதிகாரம் (ஈ) யாழ்நூல்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

3. எந்த மன்னனுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் பெங்சூற்றர், பைல் கோட்டைகளைக் கட்டினர்

(அ) கயிலைவன்னியன் (ஆ) பண்டாரவன்னியன்

(இ) சங்கிலியன் (ஈ) எல்லாளன்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

4. 'முயலார் முயல்கிறார்' கதை உமக்குக் கூறும் அறிவுரை

(அ) அறிவால் பயனில்லை (ஆ) அறிவே வெற்றி

(இ) அறிவே அழிவு (ஈ) அறிவே அழகு

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

5. சேர்ந்தாரைக் கொல்லும் பண்பு எது?

(அ) அன்பு (ஆ) பயம் (இ) பொய் (ஈ) சினம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

6. இயக்கர் நாகர் எந்த நாட்டின் பழங்குடி மக்கள்?

(அ) இலங்கை (ஆ) இந்தியா (இ) கனடா (ஈ) சிங்கப்பூர்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

7. நல்லவர் ஒருவருக்குச் செய்த உதவி எத்தகையது?

(அ) நீர்மேல் எழுத்து (ஆ) மண்மேல் எழுத்து

(இ) கல்மேல் எழுத்து (ஈ) தாளில் எழுத்து

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

8. ஈழத்தில் கண்டறியப்பட்ட தமிழர்களின் பண்டைய தலைநகரங்கள்

(அ) யாழ்ப்பாணம் மன்னார் (ஆ) பூநகரி வவுனிக்குளம்

(இ) பொம்பரிப்பு நாகதீபம் (ஈ) பூநகரி கந்தரோடை

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

9. அழுக்காறு உள்ளவனுக்குக் கிடைக்காதது

(அ) ஆக்கம் (ஆ) நட்பு (இ) வேலை (ஈ) அன்பளிப்பு

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

10. முரசு கட்டிலில் படுத்துறங்கிய குற்றத்திற்குத் தண்டிக்கப்படாமல், தமிழ்ப் புலமையால் உயிர் தப்பிய புலவர்

(அ) வள்ளுவனார் (ஆ) மோசிகீரனார்

(இ) ஔவையார் (ஈ) நக்கீரனார்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

11. மஞ்சள் குளித்து முகமினுக்கி மாயப்பொடி பூசி நின்றது

(அ) தாமரை (ஆ) குறிஞ்சி (இ) சூரியகாந்தி (ஈ) காந்தள்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

12. சென்றான் என்றால் வினைமுற்று. சென்ற என்றால்

(அ) பெயரெச்சம் (ஆ) வினையெச்சம்

(இ) பயனிலை (ஈ) அடைமொழி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

13. உழவே சிறந்தது என்று உணர்ந்ததால் தமிழர் கொண்டாடும் விழா

(அ) திருவிழா (ஆ) தைப்பொங்கல் (இ) ஆடிப்பிறப்பு (ஈ) உழுவிழா

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

14. தமிழருடைய புத்தாண்டு நாள்

(அ) சித்திரை 14 ஆம் நாள் (ஆ) சனவரி 1 ஆம் நாள்

(இ) மார்கழி 31 ஆம்நாள் (ஈ) தை 1 ஆம் நாள்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

15. விபுலானந்த அடிகளால் எழுதப்பட்ட நூல்களுள் காலத்தால் அழியாத சிறப்புடைய நூல்

(அ) ஆங்கிலவாணி (ஆ) யாழ்நூல்

(இ) மதங்கசூளாமணி (ஈ) விபுலானந்தம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

16. தமிழர்கள் விடுதலையை விரும்புகின்றனர். இவ்வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வேற்றுமை

(அ) முதலாம் வேற்றுமை (ஆ) மூன்றாம் வேற்றுமை

(இ) இரண்டாம் வேற்றுமை (ஈ) வேற்றுமை இல்லை

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

17. பொதுநலனுக்காக ஊதியம் இன்றிப் பணிபுரிவது

(அ) வினைக்கொடை (ஆ) நன்கொடை

(இ) பணிவிடை (ஈ) பணக்கொடை

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

18. இயற்கை உயிரினங்களுக்கு அளித்துள்ள சூழல் தொகுதி

(அ) நாடு (ஆ) காடு (இ) வீடு (ஈ) ஆறு

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

19. மாறன் படித்து முடித்த நூலை மூடி வைத்தான். இதில் வந்துள்ள வினைமுற்று

(அ) முடித்த (ஆ) படித்து (இ) வைத்தான் (ஈ) மூடி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

20. இல்வாழ்வோர் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாக் கடமைகளில் ஒன்று

(அ) விருந்தோம்பல் (ஆ) பிறந்தநாள் விழா

(இ) திருமணம் (ஈ) பயிர்ச்செய்கை

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

21. எத்தகைய நெஞ்சு குறுகுறுக்கும்?

(அ) படியாத நெஞ்சு (ஆ) குற்றமுள்ள நெஞ்சு

(இ) மானமுள்ள நெஞ்சு (ஈ) நல்ல நெஞ்சு

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

22. சுட்டெழுத்துக்கள் என்று சொல்லப்படுபவை

(அ) உ ஆ ஏ (ஆ) ஆ ஓ ஏ (இ) அ ஏ ஓ (ஈ) அ இ உ

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

23. ஐம்பெருங்காப்பியங்களுள் நெஞ்சை அள்ளுவது என்று புகழப்படுவது

(அ) சீவகசிந்தாமணி (ஆ) சிலப்பதிகாரம்

(இ) வளையாபதி (ஈ) குண்டலகேசி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

24. தோன்றல் விகாரத்திற்குச் சரியான எடுத்துக்காட்டு

(அ) மாம்பழம் (ஆ) பாற்குடம் (இ) கடலலை (ஈ) மரவேர்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

25. சிலப்பதிகாரம் என்ற சொல்லின் புணர்ச்சியைப் பிரித்து எழுதினால்

(அ) சிலப்பு + அதிகாரம் (ஆ) சிலப்பதி + காரம்

(இ) சில + பதிகாரம் (ஈ) சிலம்பு + அதிகாரம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

26. 'க்' எனும் மெய்யும் 'ஓ' எனும் உயிரும் புணர்ந்தால் உருவாகும் உயிர்மெய்

(அ) கொ (ஆ) கே (இ) கெ (ஈ) கோ

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

27. கீழ்வரும் சொற்றொடர்களில் உவமையணிக்கு உரிய சொற்றொடர்

(அ) முகமாகிய மதி (ஆ) முத்துப்போன்ற பல்

(இ) நனிமிகு குளிர் (ஈ) பெரியமரம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

28. பால் பழம் உண்டான். இவ்வாக்கியத்தில் மறைந்து நின்று பொருள் தரும் இடைச்சொல்

(அ) கு (ஆ) உம் (இ) நனி (ஈ) கண்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

29. (திருக்குறள்) முகம் திரிந்து நோக்கக் குழைவது

(அ) விருந்து (ஆ) முகம் (இ) அனிச்சம் (ஈ) மனம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

30. இசைக்கருவிகளில் யாழ் எவ்வகையைச் சார்ந்தது?

(அ) துளைக்கருவி (ஆ) கஞ்சக்கருவி

(இ) நரம்புக்கருவி (ஈ) தோற்கருவி

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

(புள்ளிகள் 30)

2) கீழேயுள்ள பகுதியை வாசித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக.

## மலர்கள்

இயற்கையின் படைப்பில் ஐம்புலன்களுக்கான இன்பங்கள் நிறைந்து கிடக்கின்றன. அவற்றுள் ஒன்று மலர். மலர்களால் கவரப்படாத மக்களே இல்லை. வண்ணவண்ண நிறங்களாலும் தம் இனிய கமழ்வினாலும் மனங்களை ஈர்ப்பவை மலர்கள். நமது தாய்மண்ணில் தாமரை, அல்லி, மல்லிகை, முல்லை, செம்பருத்தி போன்ற மலர்கள், எல்லாப் பருவகாலங்களிலும் மலர்கின்றன. காயா, காந்தள், செங்கழுநீர், பொற்கொன்றை போன்ற மலர்கள் தமக்குரிய பருவகாலத்தில் மட்டும் மலர்பவை. சாவடைந்தவர்களுக்கு அஞ்சலி செய்வதிலிருந்து இறைவனின் வழிபாடுவரை மலர்கள் முதன்மை பெறுகின்றன. காந்தள் என்ற மலரின் இன்றைய பெயர் கார்த்திகைப்பூ என்பதாகும். கார்த்திகைப்பூவை நீங்கள் அறிவீர்கள். கார்த்திகைத் திங்களில் பூப்பதால் கார்த்திகைப்பூ எனப் பெயர் பெற்றது. மஞ்சளும் சிவப்பும் கலந்து தீச்சுடர் போல் மலர்வது இப்பூ. இம்மலர் தென்னாசியா எங்கும் மலர்ந்தாலும் ஈழத்தமிழகத்தில் மட்டும் போற்றுதற்கு உரிய பூவாகச் சிறப்புப் பெற்றுள்ளது.

1. கார்த்திகைப்பூவின் முன்னைய பெயர் என்ன?

______________________________

______________________________

2. மலர்கள் மக்களின் மனதை எப்படிக் கவர்கின்றன?

______________________________

______________________________

3. மலர்கள் எவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன?

______________________________

______________________________

4. உம்மைக் கவர்ந்த மலர் எது? ஏன்?

5. தமிழீழத்தில் எல்லாக் காலங்களிலும் மலரும் மலர்கள் எவை?

(புள்ளிகள் 10)

## 3. தரப்பட்டுள்ள ஏழு பாடநூல் வினாக்களில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் முழுவிடை தருக.

1. நம் முன்னோர்கள் ஏழு தமிழிசை ஒலிகளுக்கும் இட்ட பெயர்கள் எவை?

2. இரும்புப் பாரைக்குப் பிளவாத பாறை எதற்குப் பிளந்து கொடுக்கும்?

3. வற்றிய குளத்தில் இருக்கும் கொட்டியும் ஆம்பலும் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன?

4. மகாவம்சம் என்ற நூல் என்ன நோக்கத்துடன் எழுதப்பட்டது.

______________________________________________

______________________________________________

5. குன்றுகுழி எல்லாம் நடந்து துன்பப்படும் நிலை இரட்டையர்களுக்கு ஏன் ஏற்பட்டது?

______________________________________________

______________________________________________

6. ஈசன் உவக்கும் இன்மலர் மூன்றும் எவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

7. குடிமக்களை முதன்மைக் கதைமாந்தர்களாகக் கொண்டு எழுதப்பட்டதால் சிலப்பதிகாரம் பெற்ற சிறப்புப் பெயர் என்ன?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

3. பின்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

துஞ்சு மேதி சுறாக்களைச் சீற
சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளில் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே.

1. இப்பாடலில் உள்ள காட்சி காணப்படும் நாடு யாது?

______________________________

______________________________

2. துஞ்சுமேதி என்பதை விளக்குக.

______________________________

______________________________

3. ஏன் சுறாக்கள் ஓடிப் பலாக்கனியைக் கீறின?

______________________________

______________________________

4. பாடலில் வரும் விளைபயிர்கள் எவை?

______________________________

______________________________

5. வேலியாக அமைந்த பொருள் என்ன?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

4) தரப்பட்டுள்ள இலக்கண - மொழியியல் கேள்விகளுக்கு முழுவிடை தருக.

1. கதறிக்கதறி என்ற அடுக்குமொழியை வைத்து வாக்கியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

2. கீழ்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக்கி எழுதுக.
அ. அங்கவை பள்ளிக்குச் சென்றாள்.
ஆ. அங்கவை கல்வி கற்றாள்.

______________________________

______________________________

3. சொற்புணர்ச்சியில் விகாரப்புணர்ச்சியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக.

______________________________

______________________________

______________________________

4. உழவர் உழுவதால் உலகமக்கள் உணவைப் பெறுகின்றனர்.
இவ்வாக்கியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபுகள் எவை? எத்தனையாம் வேற்றுமைகள்?

______________________________

______________________________

5. முத்துக்கள் போல் வியர்வைத் துளிகள் முகத்தில் அரும்பின.
இவ்வாக்கியத்தில் உள்ள உவமானம், உவமேயம் என்பவற்றைத் தருக.

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

6. தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

உழவர் திருநாள் (பாடப்படி)

உழவே உயர்ந்தது
பொங்கல் விழா - தைமுதலாம் நாள் - புத்தாண்டு
மழை பாலூட்ட நெல்விளைந்த பலன்
கதிரவனைப் போற்றல்
புத்தரிசி - புதுப்பால் நெய்
புத்தாடை - கூடியுண்டு மகிழ்தல்

கயிலைவன்னியன்.

1644-1678 - பொற்காலம்
போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம்-
தலைவணங்காமை - திறை செலுத்தாமை
இராசசிங்கன் நட்பு ஆட்சிப்பரப்பு - றொபேர்ட் நொக்சு - பெல்சூற்றர் பைல் இயற்கைச் சாவு.

நான் கண்ட கனவு

(புள்ளிகள் 20)